OS: 524/2018

Date: 04.03.2026

பெயர் : கோவிந்தன் **(பி.வா.சா.1) ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்**.

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :–**</u>

1. வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சொத்து வேண்டும் என்று கேட்டிக்கிறார். நான் இந்த வழக்கில் என்ன பதில் சொல்லியிருக்கிறேன் என்று எனக்கு தெரியும். எனது பதிலில் சொல்லியுள்ள சங்கதிகள் தான் எனது எதிர்வாதம் என்றால் ஆமாம். எனது எதிர்வாதத்தை தான் முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம். நாராயணசாமியின் மனைவியான 2ம் பிரதிவாதி ராஜம்மாளுக்கு தனிப்பட்ட முறையில் சொத்தை கிரையம் வாங்க வருமானம் இல்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

2. 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள சொத்துக்களும் கூட்டுக்குடும்ப சொத்தின் வகைக்குள் தான் வரும் என்றால் அது அவர்களுக்கு தான் தெரியும் எனக்கு எப்படி என்று தெரியும் எ ன்று சாட்சி கூறுகிறார். 2ம் பிரதிவாதி பெயரில் இருக்கும் சொத்துக்கள் கூட்டுக்குடும்பச் சொத்துக்கள் என்று வாதிகள் வழக்குரையில் சொல்லியிருப்பது குறித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை இன்றுதான் தெரிந்து கொண்டேன். நாராயணசாமி, மனைவி, மகன் மற்றும் மகள் ஆகியோர்கள் வாதியுடன் சேர்ந்து தாவா சொத்துக்கள் முழுவதையும் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

3. வாதிகள் வழக்குரையில் மேற்படி அனைவரும் தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வருவதாக சொல்லிருப்பது குறித்து தெரிந்து கொண்டேனா என்றால் இன்றுதான் தெரிந்து கொண்டேன். இந்த வழக்கை யார் போட்டிருப்பது என்றால் நாராயணசாமியின் மகள் போட்டிருக்கிறார். யார்யார் மீது வாதி வழக்கு தாக்கல் செய்திருக்கிறார் என்றால் என் மீதும், என் உடன்பிறந்த சகோதரர் மீதும் போட்டிருக்கிறார்கள். நாங்கள் கிரயம் பெற்றிருப்பதால் எங்கள் மீது போட்டிருக்கிறார்கள். வேறு யார் மீதும் போடமுடியாது.

4. நாராயணசாமியின் மகளுக்கு 2003ம் ஆண்டு திருமணம் நடந்தது குறித்து தெரியுமா என்றால் தெரியாது. வழக்கில் சொல்லியுள்ள சொத்துக்களில் வேல்விழி, நாராயணசாமி, மற்றும் 3ம் பிரதிவாதிக்கு 1/3 பாகம் இருப்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது அவர்கள் பிரித்து கொண்டுதான் எனக்கு விற்பனை

செய்திருக்கவேண்டும். நாராயணசாமி எனக்கு சொத்தை விற்றுவிட்டு அவரது மகளை தூண்டிவிட்டு என் மீது வழக்கு போட்டிருக்கிறார். இது எப்படி நியாயம் என்று சாட்சி கேட்டிகிறார்.

5. முறைப்படி மூன்று பேரும் சொத்தை பிரிக்காமல் எனக்கு விற்றது குறித்து எனக்கு தெரியும் என்றால் பிரிக்காமல் தான் விற்றிருப்பார்கள். நாராயணசாமியின் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2 கி.மீ தூரம் இருக்கும். நாராயணசாமி குடும்பத்தை எனக்கு ஏற்கனவே தெரியுமா என்றால் நாராயணசாமி பெரிய பாட்டனார் மகன் நான் சின்ன பாட்டனார் மகன். நாராயணசாமிக்கு ஒரு மகளும், ஒரு மகனும் மட்டுமே இருப்பது எனக்கு ஆரம்பத்தில் இருந்து தெரியுமா என்றால் தெரியும்.

6. நாராயணசாமியின் மூதாதையர் சொத்துக்களில் நாராயணசாமிக்கும் அவரது மகனுக்கும், மகளுக்கும் பங்கு இருப்பது எனக்கு தெரியும் என்றால் தெரியும். கிரயத்திற்கு அவரது மகள் ஆந்திராவில் வேலையில் இருப்பதால் வரமுடியாது என்று நாராயணசாமியின் மகனும், மருமகளும் என்னிடம் சொல்லிவிட்டு பெரியப்பா மீது (என் மீது) எனது சகோதரி வந்து வழக்கு போடபோகிறாரா என்று கூறியதால் நான் கிரயம் செய்தேன். கிரயம் பெற்ற தேதியில் நாராயணசாமிக்கு மகள் இருப்பது தெரியும் என்றால் தெரியும்.

7. மேற்கண்ட விவரங்களை எனது பதிலுரையிரும், முதல் விசாரணை சாட்சியத்திலும் சொல்லியிருக்கிறேன் என்றால் சொல்லியிருக்கிறேன். நாராயணசாமிக்கும், அவரது மகளுக்கும் நீண்ட காலமாக பேச்சுவார்த்தை இல்லாமல் இருந்தார்களா என்றால் எப்போதும் சண்டை இருந்தது இல்லை. அவர்கள் குடும்பத்தில் பிரச்சனை இருந்து வந்தது என்றாலும், அவர் நாராயணசாமியிடம் சொத்தை பிரித்துகொடுக்கச் சொல்லி பாகம் கேட்டார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. இறுதியாக 26.01.2010ம் தேதியில் பாகம் பிரித்து கொடுக்கச் சொல்லி வாதி 1ம் பிரதிவாதியான நாராயணசாமியிடம் கேட்டார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.

8. மேற்படி தேதியில் தான் நாராயணசாமி தாவா சொத்தின் ஒரு சிறிய பகுதியை எனக்கும், எனது சகோதரருக்கும் விற்றுவிட்டதாக சொன்னார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. பின்னர் அதற்கு அடுத்த நாள் கடந்த 27.01.2010ம் தேதியன்று வாதி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று நகல் போட்டு பார்த்தபோது தான்

நாராயணசாமியும் அவரது மகனும் சேர்ந்து எனக்கும் எனது சகோதரருக்கும் கிரயம் செய்து கொடுத்தது குறித்து தெரிந்து கொண்டார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

9. வாதி வேல்விழி, அவரது வழக்குரையில் அவரது அப்பாவும், அவருடைய சகோதரரும் சேர்ந்து எனக்கும், எனது சகோதரருக்கும் சொத்தை விற்ற விவரம் 27.01.2010ம் தேதி தனக்கு தெரியவந்ததாக குறிப்பிட்டு சொல்லியிருக்கிறார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1, 2 ஆவணங்களான எனது கிரய பத்திரத்திலும், எனது சகோதரரின் கிரய பத்திரத்திலும் உள்ள சங்கதிகளை எனக்கு படித்து காட்டிதான் கிரயம் பத்திரம் எழுதப்பட்டது என்றால் ஆமாம். மேற்படி வா.சா.ஆ.1, 2 ஆவணங்களில் நாராயணசாமி, அவரது மகன் மற்றும் அவரது மனைவி மட்டும்தான் கையொப்பம் செய்திருக்கிறார்கள் என்றால் ஆமாம்.

10. சொத்தில் உரிமையுள்ள அனைவரும் கையெழுத்து செய்து விற்பனை செய்யாததால் வா.சா.ஆ.1, 2 ஆவணங்கள் சட்டத்தின் பார்வையில் செல்லதகாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. இரண்டு கிரய ஆவணத்திலும் சொத்து பிதுராஜ்ஜித வகையில் பாத்தியப்பட்டது என்று வாசகம் எழுதப்பட்டதிலிந்தே வாதிக்கும் தாவா சொத்தில் பாகம் இருப்பத்தை தெரிந்து கொண்டே நானும் எனது சகோதரரும் கிரயம் பெற்றிருக்கிறோம் என்றாலும் எனவே வா.சா.ஆ.1, 2 கிரய ஆவணங்கள் செல்லாத கிரய ஆவணங்கள் என்றாலும், வா.சா.ஆ.1, 2 ஆவணங்கள் தாவா சொத்தில் வாதிக்கு உள்ள உரிமையை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

11. இன்றுவரை நானும் எனது சகோதரரும் கிரயம் பெற்ற சொத்துக்கள் எங்களது சுவாதீனத்தில் ஒப்படைக்கப்படவில்லை என்றாலும், நாங்கள் கிரயம் பெற்ற சொத்துக்கள் உட்பட தாவா சொத்துக்கள் அனைத்தும வாதி மற்றும் 1, 2, 3 பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் தான் இருக்கிறது என்றாலும் சரியல்ல. எனது பெயரிலும், எனது சகோதரர் பெயரில் இருக்கும் கிரய பத்திரங்கள் இருப்பது குறித்து தெரிந்துகொண்ட வாதி 21.02.2010 தேதியில் மீண்டும் ஒரு பஞ்சாயத்து வைத்து வா.சா.ஆ. 1, 2 ல் தனக்கு உண்டான பாகத்தையும் மற்றும் தாவா சொத்துக்களில் தனக்கு உண்டான பாகத்தையும் பிரித்து கொடுக்கச்சொல்லி கேட்டார் என்று வழக்குரையில் வாதி சொல்லியிருப்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் வழக்கு போட்ட பின்னர் தான் எனக்கு தெரியும்.

12. நான் 1ம் பிரதிவாதியோடு ஏற்படுத்திக்கொண்டதாக சொல்லப்படும் உடன்படிக்கை ஆவணத்தை பி.வா.சா.ஆ.1 ஆக நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் பி.வா.சா.ஆ.1 ஆவணம் என்றால் எனக்கு படிக்க தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை பதிவு செய்தேனா என்றால் இல்லை. அந்த உடன்படிக்கை ஆவணத்தில் நாராயணசாமியிடம் மட்டும் தான் கையொப்பம் பெற்றேன் என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.1 உடன்படிக்கை ஆவணம் நானும், எனது சகோதரரும் கிரய பத்திரம் ஏற்படுத்தி கொண்ட பின்னர் 3 மாதம் கழித்துதான் எழுதி கொண்டோம் என்றால் இல்லை, கிரயத்திற்கு முன்பே எழுதிகொண்டோம். (சாட்சி தனக்கு கேள்வி புரியவில்லை என்றும் சொன்னார்.)

13. நான் உடன்படிக்கை என்று சொல்லும் ஆவணம் கிரயத்திற்கு பின்னிட் 3 மாதம் கழித்துதான் 14.09.2004ம் தேதியில் எழுதி கொள்ளப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.1ல் கண்ட சொத்து பூர்வீக சொத்து என்றால் இல்லை, நாராயணசாமியின் தகப்பனாரும், தாயாரும் வாங்கிய சொத்துக்கள் ஆகும். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் நாராயணசாமிக்கு பிதுராஜ்ஜிதமாயும், பாகம் மூலமாயும் பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிட்டு தான் வாசகம் எழுதப்பட்டிருக்கிறது என்றால் எனக்கு அதுபற்றி தெரியவில்லை, ஆனால் நாராயணசாமி தனது மனைவியின் பெயரில் கிரயம் பெற்ற சொத்தும், பூர்வீக சொத்தும், அவருடைய தகப்பனார் கிரயம் பெற்ற சொத்தும் இருப்பதாக சாட்சி கூறுகிறார். பி.வா.சா.ஆ.1 ஆவணம் எழுதும்போதே நாராயணசாமி, மகன், மகள், மனைவி ஆகியோர்களுக்கு பாகம் இருப்பது எனக்கு தெரியும் என்றால் தெரியும், மூன்று பேர் கையெழுத்து போட்டார்கள், நான் மகளை கையெழுத்து போடச்சொல்லி கேட்டும் நாராயணசாமிதான் அதை தடுத்துவிட்டார் என்று சாட்சி கூறுகிறார். நான் சொல்வது தவறு என்றாலும், பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் மூன்று பேரும் கையெழுத்து செய்யவில்லை என்றாலும் ஆமாம், கிரய பத்திரத்தில் தான் மூன்று பேரும் கையெழுத்து செய்துள்ளார்கள்.

14. அக்ரிமெண்டில் நாராயணசாமி மட்டும் தான் கையெழுத்து போட்டிருக்கிறார். அக்ரிமெண்டில் கண்டுள்ள சொத்துக்களில் நாராயணசாமியின் மனைவிக்கும், மகளுக்கும், மகனுக்கும் பங்கு உள்ள நிலையில் நாராயணசாமி மட்டுமே எனக்கு ஒப்பந்தம் செய்து கொடுத்திருப்பதால் அந்த உடன்படிக்கை ஆவணம் சட்டத்தின் பார்வையில் ஏற்றுக்கொள்ளதக்கது என்றால் சரியல்ல. நாராணசாமியின் குடும்பம்

எனக்கு மிகவும் நெருங்கிய உறவில் உள்ள குடும்பம் என்பதால் யார்யாருக்கு சொத்தில் பாகம் இருக்கிறது என்பது குறித்து எனக்கு நன்கு தெரியும் என்றாலும், நானும் தெரிந்து கொண்டே வாதியின் பங்கை ஏமாற்றுவதற்காக கிரய ஆவணமும், உடன்படிக்கை ஆவணமும் ஏற்படுத்தி கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல.

15. அக்ரிமெண்ட்டில் உள்ள நிலத்தின் சர்வே எண், விஸ்தீரணம் என்னவென்றால் அக்ரிமெண்ட் போட்டு 25 வருடம் ஆகிவிட்டது எனவே சர்வே எண் நினைவில்லை. விஸ்தீரணம் 2 ஏக்கர் 80 செண்ட் ஆகும். நானும் எனது சகோதரரும் கிரயம் பெற்ற சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் மொத்தம் 4 சர்வே எண்களின் எனது சகோதரருக்கு 50 செண்டும், எனக்கு 1 ஏக்கர் 30 செண்டும் கிரயம் பெற்றோம். அக்ரிமெண்டில் எத்தனை ஏக்கருக்கு போட்டோம் என்று நினைவில்லை. அக்ரிமெண்டான பி.வா.சா.ஆ.1ல் கண்ட சொத்தை தான் நானும், எனது சகோரரும் கிரயம் வாங்கினோமா என்றால் ஆமாம்.

16. அக்ரிமெண்டில் உள்ள சொத்தை அக்ரிமெண்ட் தேதியிலேயே எனக்கு சுவாதீனம் ஒப்படைத்தாக கண்டு எழுதப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம். நான் சொல்வது போல் உடன்படிக்கை போட்டு சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டிருந்தால் அந்த ஆவணத்தை கண்டிப்பாக சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்திருக்கவேண்டும் என்றாலும், அவ்வாறு பதிவு செய்யாததிலிருந்தே இந்த ஆவணம் சட்டப்படி செல்லாத ஒன்று என்றால் சரியல்ல. உடன்படிக்கை ஆவணத்தின் ஒரு இடத்தில் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டதாகவும், மற்றொரு இடத்தில் மீதி கிரய தொகையை பெற்றுக்கொண்டு சுத்த கிரயமும், சுவாதீனமும் செய்து கொடுக்கவேண்டும் என்று முரண்பட்டு வாசகங்கள் எழுதப்பட்டிருப்பதிலிருந்தே அந்த ஆவணம் சட்டப்படியான ஆவணம் அல்ல என்று தெரியவருகிறது என்றால் சரியல்ல.

17. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணம் முழுமை பெறாத ஆவணம் என்பதால் அந்த ஆவணம் வாதியின் உரிமையை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. முழுமை பெறாத ஆவணமான பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டபடிக்கு சுவாதீனம் எனக்கு எப்போதும் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்து முழுவதிலுமே வாதிக்கு 1/3 பங்கு இருக்கிறது என்றாலும், எனவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரிதான். ஆனால் எனக்கு விற்பனை

செய்யும் போதே நாராயணசாமி பிரித்து கொடுத்துவிட்டு எனக்கு விற்பனை செய்திருக்கவேண்டும் என்று சாட்சி கூறுகிறார்.

18. எங்களது கிரய பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களில் வாதிக்கு 1/3 பாகம் இருப்பதால் எங்களது ஆவணங்களில் கண்டுள்ள சொத்துக்களிலும் 1/3 பாகம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றால் எங்களுக்கு விற்ற பங்கில் வாதிக்கு பாகம் இல்லை என்று சாட்சி கூறுகிறார். வாதி கையொப்பம் செய்யாமல் நாங்கள் கிரயம் பெற்றிருப்பதால் வா.சா.ஆ. 1, 2 ஆவணங்கள் செல்லதகாத ஆவணங்கள் என்று விளம்புகை பரிகாரம் கோரியுள்ளதால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

19. தாவா சொத்துக்களில் வாதிக்கு உண்டான பாகம் கிடைக்கும் வரை தாவா சொத்துக்களை பிரதிவாதிகள் வில்லங்க விவகாரத்திற்கு உட்படுத்த கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற வாதிக்கு உரிமையுள்ளது என்றாலும், எனவே வாதி கோரியுள்ள அனைத்து பரிகாரங்களும் வாதிக்கு கிடைக்கதக்கது என்றாலும், எனவே தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

(ஒப்பம்/-த.மாலதி),
சார்பு நீதிபதி,
ஓமலூர்.